தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.06.2013 A.M

## மழைநீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு

மழைநீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று நகராட்சி அலுவலர்களுக்கு பயிற்சி முகாமில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மழைநீர் சேகரிப்பு குறித்து சென்னையில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் மழைநீரை சேமிப்பதன் அவசியம், மழைநீர் கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கட்டமைப்புகளை பராமரித்தல் குறித்து விளக்கப்பட்டது. தற்பொழுது தென் மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால், வடகிழக்கு பருவ மழையின் போது மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் அவசியம் என்று இந்தப் பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது.

தனியார் கட்டடங்கள், அரசு கட்டடங்கள், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள் போன்ற இதர கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர, மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து பொது மக்ககளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவற்கு துண்டுப் பிரசுரங்கள், கையேடுகள் வழங்குதல், மக்கள் கூடும் இடங்களில் ஃபிளக்ஸ் பேனர்கள் அமைத்தல், மழைநீர் சேமிப்பீர் மற்றும் மழைநீர் கட்டமைப்புகளை பராமரிப்பீர் ஆகிய வாசகங்கள் கொண்ட ஸ்டிக்கர்களை விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வகுப்பில் செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி, திருப்பூர், தஞ்சாவூர், வேலூர், சேலம் ஆகிய நகராட்சி மண்டலங்கள் மற்றும் மாநகராட்சியை சார்ந்த ஆணையர்கள், பொறியாளர்கள் மற்றும் நகராட்சி ஆணையரக அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

இதில் நகராட்சி நிர்வாக இணை ஆணையர் அஜய் யாதவ், நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் ஜெயலட்சுமி, நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் செபாஸ்டின், தலைமை பொறியாளர் ஆர். வெங்கடாசலம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## 100 விவசாயிகளுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு

கடலூர் மாவட்டத்தில், புதிதாக கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு 100 விவசாயிகளுக்கு மானியக்கடன் வழங்க தமிழக அரசு ரூ.5 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த 2011-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய தானே புயலில் 100-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் பாதிக்கப்பட்டன. பின்னர் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் முழுமையாக பாதிக்கப்பட்ட கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு தலா ரூ.50 ஆயிரமும், பகுதியாக சேதம் அடைந்த கோழிப்பண்ணைகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் நிவாரண உதவிகளையும் தமிழக அரசு வழங்கியது.

இதை அடுத்து நாமக்கல்லுக்கு இணையாக கோழிகளையும், கோழிமுட்டைகளையும் உற்பத்தி செய்யவும், தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ளும் நோக்கத்திலும் உலக வங்கி நிதி உதவியின் மூலம் 50 சதவீதம் மானியத்துடன் கூடிய கடன் உதவியையும் வழங்கியது.

அதன்படி, கடந்த ஆண்டு கடலூர், விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த 230 விவசாயிகளுக்கு தலா ரூ.5 லட்சம் வீதம் மொத்தம் ரூ.11 கோடியே 50 லட்சம் நிவாரண உதவியை வழங்கியது.

தொடர்ந்து இந்த ஆண்டு புதிதாக கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு 100 விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழங்குவதற்கு ரூ.5 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்து அரசு உயரதிகாரி ஒருவர் கூறுகையில், புதிய கோழிப்பண்ணைகள் அமைப்பதற்காக தமிழக அரசு ரூ.5 கோடி நிதியை கடலூர் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான பயனாளிகளை விரைவில் தேர்வு செய்து கடன் உதவி வழங்கப்படும். பயனாளிகள் தேர்வு குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவித்தார்.

## மீன்குஞ்சு வளர்ப்பு குளம் அமைக்க ரூ.3 லட்சம் மானியம்

தேனி மாவட்டத்தில் 7 இடங்களில் மீன் குஞ்சு வளர்ப்புக் குளம் அமைப்பதற்கு மீன் வளத் துறை சார்பில் தலா ரூ.3 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பு: மாவட்டத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் வரட்டாறு-நாகலாறு வடிநில பகுதியில் ஒரு இடம், மேல்வைகை வடிநிலப் பகுதியில் 4 இடங்கள், தேனியாறு வடிநிலப் பகுதியில் 2 இடங்கள் உள்பட மொத்தம் 7 இடங்களில் நன்னீர் மீன் குஞ்சு வளர்ப்புக் குளம் அமைப்பதற்கு அரசு சார்பில் மீன் வளத் துறை

மூலம் தலா ரூ.3 லட்சம் மானியம் வழங்கப்பட உள்ளது. பயனாளி தமது பங்களிப்பாக ரூ.ஒரு லட்சம் செலுத்தி, மொத்தம் ரூ.4 லட்சம் செலவில் மீன் குஞ்சு வளர்ப்பு குளம் அமைக்க வேண்டும். விண்ணப்பதாரரின் பெயரில் ஒரு ஏக்கருக்கும் குறையாமல் பட்டா நிலம் இருக்க வேண்டும்.

நீரினை பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்கள், முன்னோடி மீன் வளர்ப்பு விவசாயிகள், குழுக்களை மேம்படுத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள் தங்களது நில வரைபடம், பட்டா மற்றும் சிட்டா அடங்கல் ஆகியவற்றின் நகல்களுடன் வைகை அணையில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன் வளம்) அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## வறட்சியால் பாதிப்பு: நிவாரணம் கோரி விவசாயிகள் ஆட்சியரிடம் மனு

வறட்சியால் பாதிக்கப்பட்ட கீழப்பிடாவூர், கே. பெருங்கரை உள்பட பல கிராமங்களில் உரிய நிவாரணம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் மனு கொடுத்தனர்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் மு. கந்தசாமி, மானாமதுரை ஒன்றியச் செயலர் எஸ். முத்துராமலிங்கபூபதி, கீழப்பிடாவூர் ஊராட்சித் தலைவர் காளைலிங்கம் ஆகியோர் தலைமையில் கீழப்பிடாவூர் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த 61 விவசாயிகளும், கே. பெருங்கரை கிராமத்தைச் சேர்ந்த 43 விவசாயிகளும் மனு கொடுத்தனர்.

இது குறித்து மார்க்சிய கம்யூ. மாவட்டச் செயலர் கந்தசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையாக வறட்சி நிவாரணம் வழங்கவில்லை. இதில் கீழப்பிடாவூர் ஊராட்சி கிராமங்களும் அடங்கும்.

மானாமதுரை மேலப்பசளை கிராமத்தில் 400 ஏக்கரில் விவசாயம் பொய்த்துப் போய்விட்டது. திருப்புவனம் தாலுகா பழையனூர், ஓடாத்தூர் உள்பட 40 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேபோல் திருப்புத்தூர், எஸ். புதூர், சிங்கம்புணரி, கல்லல், இளையான்குடி ஆகிய பகுதிகளில் நிவாரணக் கணக்கெடுப்பு விடுபட்டுள்ளது. எனவே மறு கணக்கீடு செய்து பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்:மாதர் சங்கம் தீர்மானம்

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் கல்லல் ஒன்றியப் பேரவைக் கூட்டம் பட்டமங்கலத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர் அரு. கமலம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் சாந்தி, மாவட்டத் தலைவர் பஞ்சவர்ணம், மாவட்ட துணைத் தலைவர் மணியம்மா ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் கல்லல் ஒன்றியப் பொறுப்பாளர்களாக விஜயராணி (ஒன்றியத் தலைவர்), பாக்கியலட்சுமி (ஒன்றியச் செயலர்), திருமால் (பொருளாளர்) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நூறு நாள் வேலைத் திட்டப் பயனாளிகளுக்கு முழுமையான ஊதியம், பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வறட்சி நிவாரணப் பணத்திற்கு காசோலை வழங்குவதில் முறைகேடு: கண்டித்து விவசாயிகள் இன்று உண்ணாவிரதம்

வறட்சி நிவாரணப் பணம் வழங்குவதில் முறைகேட்டைத் தவிர்க்க காசோலையாக வழங்குவதிலும் முறைகேடு நடப்பதைக் கண்டித்து, விவசாயிகள் செவ்வாய்க்கிழமை (ஜூன் 11) உண்ணாவிரதம் நடத்துகின்றனர்.

கடலாடி அருகே ஏ. புனவாசல் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் வங்கியில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணப் பணம் வழங்குவதில் வங்கிப் பணியாளர்கள் கமிஷன் கேட்பதைத் தவிர்ப்பதற்குப் பணத்தை காசோலையாகத் தருமாறு மாவட்ட ஆட்சியர் க. நந்தகுமார் உத்தரவிட்டார்.

ஆனாலும் ஏ. புனவாசல் வங்கியில் காசோலை வாங்கிச் செல்பவர்களிடம், 10 சதவீத கமிஷன் தொகையை வங்கித் தலைவர் மற்றும் பணியாளர்கள் குறிப்பிட்ட தரகர்களை அனுப்பி வாங்கப்படுகிறதாம்.

இது தவிர வங்கியில் யார், யாருக்கு வறட்சி நிவாரணப் பணம் வழங்கப்படுகிறது என்ற பெயர் பட்டியலை ஒட்டுவதற்கு, வங்கி நிர்வாகத்தினர் மறுக்கிறார்களாம்.

எனவே பயனாளிகள் பெயர் பட்டியலை வெளியிட்டும், காசோலை பெறுபவர்களிடம் மறைமுகமாக 10 சதவீத கமிஷன் பெறுவதைத் தடுக்கவும் வலியுறுத்தி ஆட்சியருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.

இப் பிரச்னைக்காக செவ்வாய்க்கிழமை காலை ஏ. புனவாசல் வட்டார விவசாயப் பயனாளிகள் கடலாடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்துகின்றனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.66 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 33.66 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 200 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 281 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.56 டி.எம்.சி.

### வாழை வரத்து குறைவு; விலை உயர்வு

கோபியில் வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வாரந்தோறும் சனி மற்றும் புதன்கிழமைகளில் வாழை ஏலம் நடைபெற்று வருகிறது.

சனிக்கிழமை நடைபெற்ற வாழைத்தார் ஏல விவரம்: கதளி கிலோ ரூ.31.50 பைசா, நேந்திரன் ரூ.31, ரொபஸ்ட்டோ தார் ஒன்று ரூ.300, ரஸ்தாளி ரூ.400, மொந்தன் ரூ.340, பூவன் ரூ.350, பச்சைநாடன் ரூ.200, தேன்வாழை ரூ.450, செவ்வாழை ரூ.550 என அதிக விலைக்கு ஏலம் போனது. 3 ஆயிரத்து 500 தார்கள் ரூ.5 லட்சத்துக்கு விலை போனது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் வாழைத்தார் வரத்து குறைந்து காணப்பட்டது. இதனால், தார் ஒன்றுக்கு ரூ.50 முதல் ரூ.60 வரை விலை உயர்ந்து காணப்பட்டது.

தேங்காய் ஏல விற்பனை விவரம்: கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தேங்காய் ஏலம் நடைபெற்றது. தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ.7.80, குறைந்தபட்சமாக ரூ.4.50 பைசாவுக்கும் விலை போனது. 9 ஆயிரம் தேங்காய்கள் வரத்தாகி, ரூ.45 ஆயிரத்துக்கு விற்பனையாகியது.

### அனைத்து விவசாயிகளுக்கும் உழவர் பாதுகாப்பு அட்டை வழங்க வேண்டும்குடியாத்தம்

அனைத்து உழவர்களுக்கும் உழவர் பாதுகாப்பு அடையாள அட்டைகளை வழங்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பேர்ணாம்பட்டில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில், மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்: பாலாற்றை மாசுபடுத்தும் தோல் மற்றும் வஜ்ஜிர தொழிற்சாலைகளின் உரிமத்தை புதுப்பிப்பதில், சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் உள்ளிட்ட அரசு விதிகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். வரும் 5ஆம் தேதி கிருஷ்ணகிரியில் நடைபெறும் மாநில அளவிலான உழவர் தின பேரணிக்கு வேலூர் மாவட்டத்தில் இருந்து உழவர்கள் பெருந்திரளாக செல்ல வேண்டும்.

டெல்டா மாவட்டங்களில் வழங்குவதுபோல், வேலூர் மாவட்டத்தில் முறையாக கணக்கெடுப்பு நடத்தி வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

விவசாயப் பயிர்களை அழித்துவரும் வனவிலங்குகளை ஒழிக்கும் வகையில், அவைகளுக்கு வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு உடனுக்குடன் இழப்பீடு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் கிழக்கு மாவட்டத் தலைவர் கே. லோகநாதன் தலைமை வகித்தார். பேர்ணாம்பட்டு ஒன்றியத் தலைவர் என். ரகுபதி வரவேற்றார்.

மாநிலத் தலைவர் டாக்டர் எம்.ஆர். சிவசாமி சிறப்புரையாற்றினார்.

மேற்கு மாவட்டத் தலைவர் அரிமூர்த்தி, மாவட்டச் செயலர் என். வெங்கடேசன், கிழக்கு மாவட்டச் செயலர் எஸ். உதயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வறட்சி நிவாரணம் கோரி மனு

அரியலூர் ஆட்சிரகத்தில் வறட்சி பாதிப்புக்கு நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

இதுகுறித்து இலந்தைக்கூடத்தை சேர்ந்த விவசாயிகள் வரதராஜ், குமாரசாமி உள்பட சிலர் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமாரிடம் அளித்த மனு:

அரியலூர் மாவட்டம், இலந்தைக்கூடத்தை சேர்ந்த விவசாயிகள் 134 பேர் காவிரி டெல்டா பகுதியில் நெல் சாகுபடி செய்திருந்தோம்.

இதில் 50 சதத்திற்கு மேல் நெல் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன.

இதனிடையே, வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு முதல்வரின் வறட்சி நிவாரணத்திற்கு விண்ணப்பித்தும் எங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

இதையடுத்து நாங்கள் அனைவரும் ஏப். 29, மே 6, 27, ஜூன் 3 ஆகிய தேதிகளில் மனுக்களை அளித்தும், இதுவரை எங்களுக்கு உரிய நிவாரத் தொகை வழங்கவில்லை. எனவே, மாவட்ட நிர்வாகம் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து, நிவாரணத்தை வழங்க ஆவன செய்ய வேண்டும்.

### வறட்சி நிவாரணம் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

கரூரில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் நாள் கூட்டத்தில் விடுபட்டோருக்கு வறட்சி நிவாரணம், வேலை உறுதித் திட்டத்தில் ஊதியம் குறைவு, வாய்க்காலில் பாலம் வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்.

தாந்தோணி ஒன்றியத்தில் உள்ள வெள்ளியணை, ஜெகதாபி, உப்பிடமங்கலம், கே. பிச்சம்பட்டி, மணவாசி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் அளித்த மனு:

மேற்கண்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் சோளம், கம்பு, எள்ளு உள்ளிட்டவற்றைப் பயிரிட்டிருந்தோம். வறட்சி காரணமாக அவை காய்ந்துவிட்டன.

அரசு அறிவித்த வறட்சி நிவாரணம் வழங்குவது தொடர்பாக, இந்தப் பகுதியில் எந்த கணக்கெடுப்பும் நடைபெறவில்லை. இதுகுறித்து வேளாண், வருவாய்த் துறை அலுவலர்கள் சரியான பதிலை அளிக்க மறுக்கின்றனர். மாவட்ட ஆட்சியர் இதுகுறித்து விசாரணை நடத்தி, இந்தப் பகுதியில் உரிய முறையில் கணக்கெடுப்பு நடத்தி, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

ஊதியம் குறைவு: குளித்தலை அருகே பொய்யாமணி, திருவப்பூர், பங்களாபுதூர், கோட்டையார்தோட்டம், கோரப்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த சுமார் 50-க்கும் மேற்பட்ட பெண்கள் அளித்த மனு:

இந்தப் பகுதிகளில் சுமார் 500-க்கும மேற்பட்டோர் வேலை உறுதித் திட்டத்தில் வாய்க்கால் வெட்டும் பணிகளைச் செய்கிறோம். எங்களுக்கு ஒரு நாள் ஊதியமாக ரூ. 40 முதல் 60 வரை மட்டுமே வழங்கப்படுகிறது. அரசு நிர்ணயித்த ரூ. 148 வழங்கப்படவில்லை. ஆனால், வேலை அளவைப் பொறுத்த வரை நிர்ணயிக்கப்படும் அளவைச் செய்கிறோம். முழு ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலம் வேண்டும்: குளித்தலை அருகேயுள்ள கண்டியூர் பொதுமக்கள் அளித்த மனு:

குளித்தலையை அடுத்த வதியம், கண்டியூர் மக்கள் 160 பேருக்கு எல்லைப்பாதை என்ற இடத்தில் அரசு இலவச வீட்டு மனை வழங்கியுள்ளது. ஆனால், அந்த இடத்துக்குச் செல்ல வேண்டும் என்றால் 2 வாய்க்கால்களைக் கடந்து செல்ல வேண்டும். இல்லையென்றால், 5 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டும். எனவே, இந்த வாய்க்கால்களில் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

கேபிள் கட்டணம் அதிகம்: லோக் சத்தா கட்சி சார்பில் அளிக்கப்பட்ட மனு: கரூரில் உள்ள கேபிள் ஆபரேட்டர்கள் அரசு நிர்ணயித்த ரூ. 70-க்கு பதிலாக ரூ. 100 முதல் ரூ. 150 வரை கட்டணமாக வசூல் செய்கின்றனர். இது தொடர்பாக தனி வட்டாட்சியர் (அரசு கேபிள்) புகார் அளித்தும் பயனில்லை. மேலும், கேபிள் இணைப்புக்கு ரூ. 500 திரும்பப் பெற காப்புத் தொகையும் கேபிள் ஆபரேட்டர்கள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கின்றனர். மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கரும்பு சாகுபடிக்கு மானிய விலையில் உரங்கள்

கரும்பு சாகுபடியில் சொட்டுநீர் பாசனத்துக்கு தேவையான உபகரணங்கள், நீரில் கரையும் உரங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது என்றார் வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவக்குமார்.

ஆலங்குடி அருகேயுள்ள தட்சிணாபுரத்தில் திருச்சி அன்பில் தா௦மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற கரும்பு சாகுபடியில் புதிய தொழில்நுட்ப பயிற்சியைத் தொடக்கி வைத்து அவர் பேசியது:

சாதாரண கரணை நடவு செய்வதைக் காட்டிலும் 25 நாள் வயதுடைய கரும்பு நாற்றுகளை 6-க்கு 2 அடி இடைவெளியில் நட்டு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தால் ஏக்கருக்கு 80 மெட்ரிக் டன் மகசூல் எடுக்க முடியும்.

சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பிற்கும், அதில் பயன்படுத்தப்படும் நீரில் கரையும் உரங்களுக்கும் அரசு மானியம் அளிக்கிறது. எனவே, இம்முறைகளை உள்ளடக்கிய நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் பயிரிட வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

விவசாயிகள் ஆலோசனைக் குழுத் தலைவர் தினகரசாமி, ஈ.ஐ.டி. பாரி நுண்ணீர் பாசன தலைமை அலுவலர் சேவியர், வம்பன் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர்கள் சாமிநாதன், மதியழகன் ஆகியோர் பேசினர்.

பயிற்சியில் விவசாயிகள், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

## உழவர் பாதுகாப்புத் திட்ட நிவாரண உதவி அளிப்பு

புதுக்கோட்டையில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைகேட்பு முகாமில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பெண்ணுக்கு விபத்து நிவாரண உதவி அளிக்கப்பட்டது.

ஆட்சியரகத்தில் நடைபெற்ற முகாமுக்கு ஆட்சியர் செ. மனோகரன் தலைமை வகித்தார். கூட்டத்தில், வேலைவாய்ப்புக் கோரி 10 மனுக்கள், புதிய குடும்ப அட்டை வேண்டி 10 மனுக்கள், இலவச வீடு கோரி 25 மனுக்கள், இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் கோரி 40 மனுக்கள், முதியோர் உதவித்தொகை கோரி 45 மனுக்கள் மற்றும் இதர கோரிக்கைகளை வலியுறுத்தி 80 மனுக்கள் உள்பட மொத்தம் 205 மனுக்கள் பெறப்பட்டன.

மனுக்கள் குறித்து விசாரித்த பின்னர் அதை தொடர்புடைய துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க ஆட்சியர் அறிவுறுத்தினார்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அறந்தாங்கி வட்டம், துரையரசபுரத்தை சோ்ந்த காளியம்மாளுக்கு விபத்து நிவாரண உதவித் தொகையாக ரூ. 1.02 லட்சத்துக்கான காசோலையை ஆட்சியர் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) அன்பழகன், தனித்துணை ஆட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) பா. பாக்கியம்தேவகிருபை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ப. சிதம்பரம், சிறப்புத் திட்ட அமலாக்க அலுவலர் சீனிவாசன், மாவட்ட வழங்கல் அலுவலர் மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 18.09 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 18.09 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## சென்னையில் 100 டிகிரி வெயில்; இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுவையில் அதிகபட்சமாக புதுச்சேரியில் திங்கள்கிழமை 103 டிகிரி வெயில் பதிவானது.

இதேபோல, சென்னை, திருச்சி, கடலூர், காரைக்கால், நாகப்பட்டினம், தொண்டி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு அதிகமான வெயில் பதிவானது.

திங்கள்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்): புதுச்சேரி - 103, நாகப்பட்டினம் - 102, மதுரை, தொண்டி, திருச்சி - 101, சென்னை நுங்கம்பாக்கம், காரைக்கால் - 100, தூத்துக்குடி - 99, சென்னை மீனம்பாக்கம், கரூர் பரமத்தி - 98, சேலம், வேலூர் - 97, தருமபுரி - 94, கோவை - 90.

மழை வாய்ப்பு: வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமையும், திங்கள்கிழமையும் மழை பெய்தது.

திங்கள்கிழமை காலை வரையிலான நிலவரப்படி வால்பாறை, சின்னக்கல்லாறு ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழை பெய்துள்ளது. இதேபோல சென்னையின் பல்வேறு பகுதிகளில் வெப்பச் சலனத்தின் காரணமாக திங்கள்கிழமை மாலையில் மழை பெய்தது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் செவ்வாய்க்கிழமை மழையோ, இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேக மூட்டமாக காணப்படும். சில இடங்களில் மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்யும். தரைக்காற்று வேகமாக வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

11.06.2013 A.M

## கொடைக்கானல் பகுதியில் மழை பழநி அணைகளுக்கு நீர்வரத்து

பழநி: கடந்த சில நாட்களாக கொடைக்கானலில் பெய்யும் மழையால், பழநி அணைகளுக்கு நீர்வரத்து உள்ளது. கொடைக்கானல் மழைப்பகுதியில் பெய்த மழையால், பழநியில் உள்ள வரதமாநதி, பாலாறுபொருந்தலாறு, குதிரையாறு அணைகளுக்கு தண்ணீர் வரத்துள்ளது . குறைந்திருந்த நீர்மட்டம், அதிகரிக்கத் துவங்கியுள்ளது.அனைகளின் நேற்றைய நிலவரம்: வரதமாநதி அணைக்கு, வினாடிக்கு 5 கனஅடி நீர்வரத்தும், 2 கன அடி நீர் வெளியேற்றமும் உள்ளது. கடந்த இரண்டு நாட்களில் நீர்மட்டம் மூன்று அடி உயர்ந்தது. நேற்றைய நீர்மட்டம் 24 அடி(மொத்த உயரம்67 அடி).பாலாறுபொருந்தலாறு அணைக்கு, வினாடிக்கு ஒரு கன அடி நீர்வரத்தும், 7 கன அடி நீர் வெளியேற்றமும் உள்ளது. நீர்மட்டம் 25 அடி(மொத்த உயரம் 65 அடி).குதிரையாறு அணைக்கு வினாடிக்கு 3 கன அடி நீர்வரத்தும், 3 கன அடி நீர்வெளியேற்றமும் இருந்தது. நீர்மட்டம் 27 அடி (மொத்த உயரம் 80 அடி).பரப்பலாறு அணையின் நீர்மட்டம் 31.50 அடி (மொத்த உயரம் 90 அடி). நங்காஞ்சியாறு அணையின் நீர்மட்டம் 22 அடி (மொத்த உயரம் 40 அடி), குடகனாறு அணையில் நீர்மட்டம் 10.12 அடி (மொத்த உயரம் 27.4 அடி).

## வறட்சி நிவாரண பட்டியலில் விடுபட்டவர்கள் தொகை பெற... வாய்ப்பில்லை தாலுகாக்களில் வருவாய் தீர்வாயம் முடிக்கப்பட்டதால் சிக்கல்

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் நிவாரண பட்டியலில் இடம்பெறாத விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வருவாய் தீர்வாயம் கணக்கு முடிக்கப்பட்டதால் நிவாரணம் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.இதில், வருவாய் கணக்குகளில் பதிவு செய்யப்பட்ட பயிர்கள் மட்டுமேகணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சில பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்ட பயிர்கள் குறித்து வருவாய் கணக்குகளில் முறையாக பதிவுசெய்யவில்லை.வழக்கமாக கடந்த ஆண்டு உள்ளதையே இந்த ஆண்டும் பதிவு செய்வது

மற்றும் சில விவசாயிகள் பயிரிட்டபோதும், வருவாய் கணக்குகளில் பதிவு செய்யாதது ஆகியவற்றை வி.ஏ.ஓ., ஆர்.ஐ., ஆகியோர் செய்ததால், தற்போது விவசாயிகள் பலர் வறட்சி நிவாரணம் பெற முடியாதநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.வருவாய் கணக்குகளில் உள்ளவர்கள் மட்டுமே தற்போது வறட்சி நிவாரணம் பெற்று வருகின்றனர். உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலர் தங்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்ககோரி தற்போது கலெக்டர் அலுவலகம், தாலுகா அலுவலகம் மற்றும் வேளாண்மைத்துறையினரிடம் மனுகொடுத்து வருகின்றனர்.இந்த மனுக்கள் வி.ஏ. ஓ.,க்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. இருந்தபோதும், வருவாய் கணக்கில் இருந்தால் தான் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்ற நிலை உள்ளதால், புதிதாக கணக்கில் ஏற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் கடந்த மாதம் தான் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜாமபந்தி) நடந்தது.இதில் வருவாய் கணக்குகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டன. தற்போது இந்த கணக்குகளில் திருத்தம் செய்து விடுபட்ட விவசாயிகள் பயிர்கள் செய்ததாக புதிதாக பதிவு செய்ய முடியாது. வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""மத்திய அரசு வறட்சி நிவாரணம் தமிழகத்திற்கு வழ ங்கும் பட்சத்தில், மாநில அரசு மாவட்ட வாரியாக குறைந்த தொகையை ஒதுக்கும். அப்போது மாவட்ட நிர்வாகம் அமைக்கும் குழுவின் நேரடி ஆய்வில் பயிர்கள் பாதிக்கப்பட்டது தெரியவந்தால், விடுபட்டவர்களுக்கு நிவாரண தொகை வழங்க வாய்ப்புள்ளது. இல்லாத பட்சத்தில் வறட்சி நிவாரண தொகையை மாநில அரசு மூலம் எதிர்பார்ப்பது இயலாத ஒன்று," என்றார்.

## கோடை பயிர் சாகுபடி மதிப்பீடு வருவாய்த்துறையால் "சிக்கல்'

தேனி:கோடை சாகுபடி பயிர் விவரம், பரப்பளவு குறித்த மதிப்பீடுகளை, வருவாய்த்துறை பதிவு செய்ய மறுப்பதால், சாகுபடி விவரங்களை அரசுக்கு அனுப்ப முடியாமல் தோட்டக்கலைத்துறை தவிக்கிறது.ஒவ்வொரு சீசனிலும் பயிரிடப்படும் தோட்டக்கலைப்பயிர்களின் வகைகள், சாகுபடி பரப்பு, விளைச்சல் விவரங்கள் குறித்து தோட்டக்கலைத்துறை ஒரு மதிப்பீடும், வருவாய்த்துறை ஒரு மதிப்பீடும் தயாரிக்கும். இந்த இரு மதிப்பீடுகளையும் வைத்து அரசுக்கு ஒத்திசைவு அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.தமிழகத்தில் திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் கோடை சாகுபடி அதிகம் நடக்கிறது. ஏப்., மே, ஜூன் மாதங்களில் நடக்கும் இந்த சாகுபடி விவரங்களை தோட்டக்கலைத்துறை பதிவு செய்தாலும், வருவாய்த்துறை பதிவு செய்ய மறுக்கிறது. கடந்த 13 ஆண்டுகளாக இந்த நிலை நீடித்து வருகிறது.இதனால் பயிர் சாகுபடி நிலவரம் அரசுக்கு தெரிவிக்க முடியவில்லை. தவிர தற்போது காய்கறிகள் விலை அதிகரித்துள்ள நிலையில், எந்த

வகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது, எந்தெந்த காய்கறிகளின் விலை, எப்போது குறையும் போன்ற விவரம் எதுவும் அரசுக்கு தோட்டக்கலைத்துறையால் தெரிவிக்க முடியவில்லை.அதன் பின்னர் தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறையிடம் எவ்வளவு கேட்டும் கோடை சாகுபடி விவரங்களை பதிவு செய்ய மறுக்கின்றனர். அதிகவேலைபளுவை இதற்கு காரணமாக சொல்கின்றனர். இந்த ஆண்டிலிருந்தாவது கோடை சாகுபடி விவரங்களை பதிவு செய்ய வேண்டும்,என தோட்டக்கலைத்துறை அரசிடம் முறையீடு செய்துள்ளது.

## பாக்கித்தொகை கேட்டு விவசாயிகள் முற்றுகை

சிவகங்கை:சிவகங்கையில்,விவசாயிகள் வங்கிக்கடன், கரும்பு கிரைய தொகை உட்பட ரூ.70 கோடியை சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்ககோரி, கரும்பு விவசாயிகள் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட கரும்பு விவசாயிகள்,படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலைக்கு,கரும்பு வழங்கி வருகின்றனர். இதற்காக,வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன் தொகையை, வட்டியுடன் விவசாயிகளிடம் சர்க்கரை ஆலை நிர்வாகம் பிடித்தம் செய்து, வங்கியில் செலுத்த வேண்டும். பல ஆண்டுகளாக ரூ.40 கோடி பாக்கியை வங்கியில் செலுத்தவில்லை.2012-13ல் விவசாயிகள், வழங்கிய கரும்பு கிரைய தொகை ரூ.30 கோடியையும்,ஆலை நிர்வாகம் வழங்கவில்லை. முற்றுகை: ஆலை நிர்வாகம், வங்கி கடன், கரும்பு கிரைய தொகையை வழங்ககோரி, நேற்று சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தை, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் எஸ்.குணசேகரன் எம்.எல்.ஏ., தலைமையில், சங்க செயலாளர் ரகுநாதன் உள்ளிட்ட விவசாயிகள், கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். கலெக்டர் அலுவலகத்திற்குள் நுழைய முயன்றபோது, விவசாயிகள், போலீசாருக்கிடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. விவசாயிகளிடம், கலெக்டர் ராஜாராமன் பேச்சு வார்த்தை நடத்தினார்.விவசாயிகள் சமரசம் ஆகவில்லை. ஆலை பொது மேலாளர் ஆறுமுகம் வந்து, பதில் அளித்தால் மட்டுமே திரும்ப செல்வோம் என தெரிவித்தனர். ஆலை நிர்வாக இயக்குனர் மாணிக்கம், ஜூன் 17 அன்று நேரடியாக வந்து, விவசாயிகளிடம் பேசுவதாக, உறுதியளித்தார். இதையடுத்து,விவசாயிகள் முற்றுகையை கைவிட்டு சென்றனர்

## வறட்சி நிவாரணம் வழங்க கோரி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

விருதுநகர்:வறட்சி நிவாரணம் வழங்க கோரி, விருதுநகர் தாலுகா அலுவலகம் முன்பாக, விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். விருதுநகர் மற்றும் பல பகுதிகளில், வறட்சி நிவாரண வருவாய்த்துறை அதிகாரிகள் கணக்கெடுப்பினை, முறையாக செய்யாததால், பலருக்கு வறட்சி

நிவாரணம் வழங்கப்படவில்லை. சீனியாபுரம், மூளிப்பட்டி, நக்கலக்கோட்டை, வாழவந்தாள்புரம், நமச்சிவாயபுரம் உட்பட பல்வேறு கிராமங்களிலும் முறையாக வழங்கவில்லை. இதை கண்டித்து, விருதுநகர் தாலுகா அலுவலகம் முன்பாக, விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் விஜயமுருகன் தலைமையில், ஆர்ப்பாட்டம் செய்தனர். நிவாரணம் வழங்க கோரி, தாசில்தார் மங்களநாதனிடம் மனு அளித்தனர். தாசில்தார் கூறுகையில், ""விண்ணப்பங்களை விசாரிக்க, அதிகாரிகள் அனுப்பப்படுவர்ம். அதனடிப்படையிலும் நிவாரணம் வழங்க, அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்," என்றார்.

## பாபநாசம் நீர்மட்டம் உயர்வு

விக்கிரமசிங்கபுரம் : பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் 2 அடி அதிகரித்து 61 அடியானது.பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 58.80 அடியாக இருந்தது. நேற்று அணையின் நீர்மட்டம் சுமார் 2 அடி அதிகரித்து 61 அடியானது. அணைக்கு விநாடிக்கு 934.03 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணைப்பகுதியில் 1 மி.மீ., மழை அளவு பதிவாகியுள்ளது. நேற்று சேர்வலார் அணையின் நீர்மட்டம் 80.05 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 71.69 அடியாகவும் இருந்தது.

## தக்காளி வரத்து தொடர் அதிகரிப்பு வாரச்சந்தையில் விலை குறைவு

அந்தியூர்: அந்தியூர் வார சந்தைக்கு பல்வேறு மாவட்டங்களில் விளைந்த தக்காளி வரத்து அதிகரிப்பால், கிலோ, 25 ரூபாய் குறைந்தது.

அந்தியூரில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் சந்தை நடப்பது வழக்கம். ஈரோடு, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள், பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை விற்பனைக்கு கொண்டு வருவர். அந்தியூர், அத்தாணி, கோபி, அம்மாபேட்டை, பவானி, ஆப்பக்கூடல், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள, 50க்கும் மேற்பட்ட ஊர்களில் இருந்து, தேவையான பொருட்கள் பெற்று செல்ல, அந்தியூர் சந்தைக்கு மக்கள் வருவர்.

ஒரு மாதத்துக்கு முன், சிறிய வெங்காயம், தக்காளி ஆகியவை, திடீரென விலையேற்றம் கண்டது. சென்ற வாரம், சிறிய வெங்காயம், 100 ரூபாயை கடந்தும், தக்காளி விலை, 60 முதல், 70க்கும் விற்கப்பட்டது.

அந்தியூர் சந்தைக்கு, பெங்களூரு, கிருஷ்ணகிரி, ஒசூர், மேச்சேரி உள்ளிட்ட இடங்களில் இருந்து தக்காளியும், பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் உள்ளூர் விவசாயிகள் மூலம் சிறிய

வெங்காயம் கொண்டு வரப்படுகின்றன. நேற்று நடந்த அந்தியூர் வார சந்தையில், யாரும் எதிர்பாராத வகையில், பல்வேறு ஊர்களில் இருந்து தக்காளி வரத்தானதால், விலை குறைந்தது. ஒரு கிலோ, 65 ரூபாய்க்கு விற்கப்பட்ட தக்காளி, 25 ரூபாய் குறைந்து, 40க்கு விற்பனையானது. தக்காளி வாங்க முடியாமல் சிரமப்பட்ட மக்கள், விலை குறைப்பால் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், சிறிய வெங்காயம் கடந்த வாரம்போலவே, 90 முதல், 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

நேற்றைய சந்தையில், இஞ்சி கிலோ, 200க்கும், முட்டைகோஸ் ஒன்று, 25, காலிப்ளவர் ஒன்று, 25, உருளைகிழங்கு கிலோ, 25, ஊட்டி உருளைகிழங்கு, 35, கேரட், 15, பீன்ஸ், 35, முள்ளங்கி, 30, கத்தரிக்காய், 35, நாட்டு பாகற்காய், 80, கலப்பு பாகற்காய் இனம், 60க்கு விற்கப்பட்டது. புடலங்காய் ஒன்று, 6 முதல், 8க்கும், கலர் முட்டைகோஸ் ஒன்று, 40, மேரகாய் (சவ்சவ்) ஒன்று, 6 முதல், 8க்கும், ஐந்து முருங்கை காய், 10, நாட்டு பூண்டு, 32க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## ஊட்டி உழவர் சந்தைக்கு கிராக்கி!விலையேற்றத்தால் மாற்றம்

ஊட்டி:காய்கறிகளின் விண்ணை முட்டும் விலையேற்றத்தால், ஊட்டி உழவர் சந்தைக்கு கிராக்கி அதிகரித்துள்ளது; சமவெளி பிரதேச மக்கள் கூட, தங்கள் வீட்டு விசேஷங்களுக்கு, ஊட்டி உழவர் சந்தைக்கு வந்து காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

கடந்தாண்டு, பருவமழை தவறியதால், மாநிலத்தின் பல இடங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டது. விளை நிலங்கள் வறண்டதால், பயிர்களின் விளைச்சல் குறைந்தது. குறிப்பாக, காய்கறி விவசாயம், பெரிதும் பாதிக்கப்பட்டது. உருளைக் கிழங்கு, வெங்காயம், தக்காளி, பீன்ஸ் என, அத்தியாவசிய காய்கறிகளின் விலை, விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

ஊட்டி உழவர் சந்தைக்கு கிராக்கி

இந்நிலையில், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் விளையும் உருளைக் கிழங்கு, பீன்ஸ், கேரட், முட்டை கோஸ் போன்றவை, ஊட்டி உழவர் சந்தையில், வெளி மார்க்கெட் விலையை விட 20 - 40 சதவீதம் விலை குறைவாக விற்கப்படுவதால், காய்கறி வாங்க வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உள்ளூர் மக்கள் தவிர, மேட்டுப்பாளையம், திருப்பூர் உட்பட பிற மாவட்டங்களை சேர்ந்த மக்களும், திருவிழா மற்றும் திருமண நிகழ்ச்சிகளுக்கு, ஊட்டி உழவர் சந்தைக்கு வந்து, காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

விலை வித்தியாசம்

ஊட்டி உழவர் சந்தை அலுவலர்கள் கூறுகையில்,"சென்னை உட்பட பெரு நகரங்களில் ஒரு கிலோ பீன்ஸ் 100 -120 ரூபாய், தக்காளி 60 -80, சின்ன வெங்காயம் 100 -120 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஊட்டி உழவர் சந்தையில் பீன்சு கிலோ 65-70, தக்காளி 50-55, சின்ன வெங்காயம் 70 -80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால், திருப்பூர் உட்பட வெளியூர்களை சேர்ந்த பலர், தங்கள் வீட்டு விசேஷங்களுக்கு தேவையான பீன்சு, தக்காளி, வெங்காயம் உட்பட பொருட்களை, ஊட்டி உழவர் சந்தையில் வாங்கி, பஸ் மூலம் கொண்டு செல்கின்றனர். சென்னை உட்பட பெரு நகரங்களில் பீன்சுக்கு கிராக்கி அதிகரித்துள்ளதால், மார்க்கெட் வியாபாரிகள் சிலரே, உழவர் சந்தையில் இருந்து பீன்ஸ் வாங்கி அனுப்பி வைக்கின்றனர்' என்றனர்.

அலைமோதும் விவசாயிகள்

ஊட்டிஉழவர் சந்தையில், காய்கறி வாங்க அலைமோதும் பொதுமக்களால், காய்கறிகள் மிக விரைவில் விற்று தீர்கின்றன. எனவே, அதிகளவு உழவர்கள், உழவர் சந்தையில் காய்கறிகளை விற்க ஆர்வம் காட்டுகின்றனர். சந்தையில், பிளாட்பார கடைகள் கூட நிரம்பியுள்ளன. கடந்த மாதம் வரை தினமும் 75- 80 உழவர்கள், சந்தையில் விற்பனை செய்து வந்த நிலையில், தற்போது கூடுதலாக பலர், உழவர் சந்தையில் விற்பனை செய்ய அடையாள அட்டை கேட்டுள்ளனர்; அதற்கேற்ப உழவர் சந்தையில் இடம் இல்லாததால், அவர்களுக்கு இட வசதியை ஏற்படுத்தி கொடுக்கும் முயற்சியில் உழவர் சந்தை அலுவலர்கள்
ஈடுபட்டுள்ளனர்.

## உரம் தேவை அதிகரிப்பு

மஞ்சூர்:பரவலாக பெய்து வரும் மழையால் விவசாயிகளுக்கு உரம் தேவை அதிகரித்துள்ளது.நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது. மழையால் தேயிலை செடிகளில் ஈரப்பதம் ஏற்பட்டுள்ளது. உரம் போட்டு தேயிலை செடிகளை பராமரித்தால், வெயில் காலத்தில் நல்ல மகசூல் கிடைக்கிறது. இதனால், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, என்.சி.எம்.எஸ்., மூலம் தற்போது உரம் வினியோகிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளும் ஆர்வமுடன் பெற்று வருவதால் உரம் தேவை அதிகரித்துள்ளது. எனவே, "விவசாயிகளுக்கு தேவையான உரத்தை கூட்டுறவுத்துறை நிர்வாகம் வினியோகிக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

## தோட்டக்கலை பயிர்களில் விவசாயிகள் ஆர்வம்:தண்ணீர் பற்றாக்குறையால் மாற்றம்

திருக்கழுக்குன்றம்:கோடைக் காலத்தில் தோட்டக்கலை பயிரில், குறைந்த நீரை பயன்படுத்தி, குழிவகை பயிர்களை பயிரிடுவதில், ஆர்வம் காட்டி வருகின்றனர்.காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த, 10 ஆண்டுகளுக்கு முன் நெல், கரும்பு, கேழ்வரகு, நிலக்கடலை போன்ற பயிர்கள், அதிக அளவில் பயிரிடப்பட்டன. தண்ணீர் பற்றாக்குறை:தற்போது, பருவமழை பொய்த்து, நீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால், இரண்டு போகம் பயிர் செய்த இடங்களில், ஒரு போகம் மட்டுமே பயிர் செய்கின்றனர்.

கிணற்று நீர் பாசனத்தை நம்பி, சொர்ணவாரி பட்டத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகள், போதிய நீரின்றி, தோட்டக்கலை பயிர்களான கத்திரி, வெண்டை போன்றவற்றை பயிர் செய்து வருகின்றனர். தற்போது, குறைந்த நீர் பாசனத்தை பயன்படுத்தி, குழிவகை முறையில், பயிர்களை பயிரிடுகின்றனர்.இதுகுறித்து, எடையூர் விவசாயி ஜெகதீசன் என்பவர் கூறியதாவது:எனக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தில், நெல் சாகுபடி செய்து வந்தேன். இந்த ஆண்டு, தண்ணீர் பற்றாக்குறை கடுமையாக உள்ளதால், குறைந்த நீரை பயன்படுத்தி,50 சென்ட் நிலத்தில் பூசணி செடி பயிரிட்டுள்ளேன்.

இதற்காக, 400 குழிகள் அமைத்து, ஐந்து அடி இடைவெளி விட்டு, ஒரு குழிக்கு நான்கு விதைகள் வீதம் நடவு செய்தேன். நடுவதற்கு முன் நிலத்தை நன்கு உழுது, தயார் செய்து குழியில் மக்கிய தொழு உரம், ரசாயன உரம் கலந்து நடவு செய்தேன். ஒரு வாரத்தில் விதைகள் முளைத்தன. பின்பு, 25 நாட்களில் களையெடுத்து பராமரித்து வருகிறேன்.அறுவடை:குறைந்த அளவில் நீர் இருப்பதால் குழிகளில் மட்டும், தேவைக்கேற்ப தண்ணீர் பாய்ச்சுகிறேன். 90 நாட்களில் பூசணிக்காய் அறுவடைக்கு தயாராகிவிடும். இதுவரை, 4,000 ரூபாய் செலவு செய்துள்ளேன். 12 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறேன்.இவ்வாறு, அவர் கூறினார்.

## வறட்சி நிவாரண தீவன பயிர் வளர்ப்பு திட்டம் துவக்கம்

திருவள்ளூர்:தீவனப் பற்றாக்குறையால் கால்நடைகளை விற்பதை தடுப்பதற்காக, வறட்சி நிவாரண தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில், வறட்சிமிக்க பகுதிகளில் கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையை போக்கவும், கிராமங்களிலேயே தீவனப் பயிர் உற்பத்தி செய்யவும், தீவனப் பற்றாக்குறையால் கால்நடைகள் விற்பனை செய்வதை தடுக்கவும் வேண்டி, வறட்சி நிவாரண தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் சோளம், குறுகிய கால பயிராக

பசுந்தீவனமாகவும், உலர் தீவனமாகவும் பயன்படும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. குறைந்தது, 0.5 ஏக்கர் நிலமும், நீர்ப்பாசன வசதியுமுள்ள விவசாயிகள், இத்திட்டத்துக்கு விண்ணப்பித்து பயன் பெறலாம்.

விவசாயிகளின் கால்நடைகளுக்கான தேவை போக, மீதமுள்ள தீவனப் பயிரை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, 50 சதவீத மானிய விலையில் வழங்கி பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.நிலம் உழவு செய்து பராமரித்தல், உரமிடுதல், விதை மற்றும் நடவு மேற்கொள்ளுதல், நீர்ப்பாசனம், களையெடுத்தல், அறுவடை செய்தல் ஆகியவற்றுக்கு ஒரு விவசாயிக்கு 6,800 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.இதுகுறித்து, விவசாயிகள் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களை தொடர்பு கொண்டு, பயனடையுமாறு ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மானாவரி நிலக்கடலை விதைப்பு பணி தீவிரம்: பருவமழை கை கொடுக்குமா?

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில், பரவலாக பெய்த மழையை நம்பி, மானாவரி நிலக்கடலை, சோளம், தட்டப்பயிர், பச்சைப்பயிர் விதைப்பு பணியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி பகுதியில், சில ஆண்டுகளாக, போதிய மழை இல்லாததால், ஏரி, குளம், குட்டைகள் வறண்டு, முற்புதர் மண்டி கிடக்கின்றன. 100 அடி ஆழம் கொண்ட விவசாய கிணறுகளும் வறண்டதால், குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. நடப்பாண்டில், கடும் வறட்சி வாட்டி எடுத்ததால், தென்னை, மா, வாழை, அரளி, குண்டுமல்லி, கொய்யா உள்ளிட்டவை தண்ணீர் இன்றி மடிந்தன.இந்நிலையில், பனமரத்துப்பட்டி பகுதியில், சில நாட்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது. மழையை பயன்படுத்தி, மானாவரி விதைப்பு பணியில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மழையால் குளிர்ந்த வயலை, உழவு செய்து, நிலக்கடலை, சோளம், தட்டப்பயிர், பச்சைப்பயிர், துவரை உள்ளிட்டவை விதைக்கின்றனர். அதிக அளவில், மானாவரி நிலக்கடலை பயிர் செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மூக்குத்திபாளையம், பசுவநத்தம்பட்டி, சந்தியூர், அம்மாபாளையம், பள்ளித்தெருப்பட்டி, பாரப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், மானாவரி நிலக்கடலை விதைப்பு பணி தீவிரமடைந்துள்ளது. பெரமனூர், களரம்பட்டி, நத்தமேடு உள்ளிட்ட கிராமங்களில், மானாவரி நிலக்கடலை பயிர் செய்ய, கூடுதல் மழையை எதிர்பார்த்து, விவசாயிகள் காத்திருக்கின்றனர். பசுவநத்தம்பட்டி விவசாயிகள் கூறியதாவது:

ஆண்டுதோறும் வழக்கமாக, சித்திரை மாதம் பருவ மழை பெய்யும். இந்த ஆண்டு காலம் கடந்து, வைகாசி மாத கடைசியில், குறைந்த அளவில் மழை பெய்தது. இந்த மழையை நம்பி, மானாவரி நிலக்கடலை விதைத்து வருகிறோம். ஒரு கிலோ விதை நிலக்கடலை, 60 ரூபாய் வீதம், ஏக்கருக்கு,

50 கிலோ வாங்கினோம்.மாடு மூலம் உழவு செய்ய நாள் ஒன்றுக்கு கூலி, 600 ரூபாய் என, மூன்று நாட்கள் உழவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு மானாவரி நிலக்கடலை பயிரிட, 7,000 ரூபாய் வரை செலவாகிறது. தொடர்ந்து மழை பெய்தால், 90 நாட்களில் நிலக்கடலை அறுவடை செய்யலாம். மழை பெய்யாமல் ஏமாற்றினால், பெரும் நஷ்டம் ஏற்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சேலம் அருகே தீவிரம் காய்கறிகள் பயிரிட நிலத்தில் உழவுபணி

சேலம்: சேலம் பகுதியில், தென்மேற்கு பருவமழை துவங்கி உள்ளதால், காய்கறி பயிரிட நிலத்தை, விவசாயிகள் உழுது வருகின்றனர்.சேலம் மாவட்டத்தில், சிவதாபுரம், வேடுகாத்தாம்பட்டி, சித்தர்கோவில், செம்மன்கரடு உள்ளிட்ட பகுதிகளில், காய்கறி, கீரை, நிலக்கடலை உள்ளிட்டவற்றை விவசாயிகள் அதிகளவில் பயிரிடுவர். மழை இல்லாததால், கடந்த சில மாதங்களாக பயிரிட முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டனர். தற்போது, தென்மேற்கு பருவமழையின் தாக்கம் தெரிய துவங்கி உள்ளது.இதனால், நிலத்தை உழுது போட்டால், மழை பெய்யும்போது, காய்கறி பயிர்களை நடுவதற்கு வசதியாக இருக்கும் என விவசாயிகள் பலர், டிராக்டர் மற்றும் மாடுகளைக் கொண்டு உழுது வருகின்றனர். மழை வருவதுபோன்று ஏமாற்றி விடுவதால், நிலத்தை உழுத விவசாயிகள் வானத்தை பார்த்தபடி காத்திருக்கின்றனர். செம்மன்கரடு பகுதியைச் சேர்ந்த விவசாயி பாஸ்கர் கூறுகையில்,"" நிலத்தை உழாமல் விட்டால், புல், புதர்கள் முளைத்து விடும். அதன்பின், பயிரிடுவது கடினமாக இருக்கும். கிணற்றில் தண்ணீர் குறைவாக உள்ளது.மழை சீசன் துவங்கி உள்ளதால், கிணறு நிரம்பும். அப்போது, தக்காளி, வெண்ணை, கீரை, நிலக்கடலை உள்ளிட்டவற்றை பயிரிடுவோம், என்றார்.

## வறட்சி நிவாரணம் கணக்கெடுப்புக்கு கோரிக்கை

தர்மபுரி: பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா மணியம்பாடி நக்ஸல் பாதிப்பு கிராமத்தில் வறட்சி நிவாரணம் வழங்கிட விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க மீண்டும் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது குறித்து கிராம மக்கள் சார்பில் முதல்வர் ஜெயலலிதா தனிப்பிரிவுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: மணியம்பாடி கிராமம் நக்ஸல் பாதிப்பு கிராமம். இக்கிராமத்தில் நக்ஸல் பாதிப்பு சமூக மேம்பாட்டு திட்ட நிதி இது வரையில் ஒதுக்கீடு செய்யவில்லை. இக்கிராமத்தில் கடும் வறட்சி காரணமாக குடிநீர் கிடைப்பது அரிதாகியுள்ளது.வேலை வாய்ப்பு இல்லாமல் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் பலர் விடுபட்டுள்ளனர்.

எனவே, இக்கிராமத்தில் மீண்டும் வருவாய் துறை மூலம் கணக்கெடுப்பு நடத்தி, விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.


தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.06.2013 A.M**

---

## அரசு உத்தரவை மீறி வறட்சி நிவாரணத்தில் பயிர் கடன் வசூல்



சிவகங்கை: அரசு உத்தரவை மீறி வறட்சி நிவாரணத்தொகையில் பயிர் கடன் வசூலிக்கப்படுவதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் சென்னையை தவிர்த்த 31 மாவட்டங்களையும் வறட்சி பகுதிகளாக தமிழக அரசு அறிவித்தது. டெல்டா மாவட்டங்களில் 3.61 லட்சம் ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டதாக கணக்கிடப்பட்டது. இதையடுத்து ஏக்கருக்கு ரூ15 ஆயிரம் வீதம் 1.75 லட்சம் விவசாயிகளுக்கு ரூ542.04 கோடி நிவாரணத் தொகையாக அறிவிக்கப்பட்டது. அதேபோல் மற்ற 18 மாவட்டங்களில் 6.25 லட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டதாக கணக்கிடப்பட்டது. இதையடுத்து ஏக்கருக்கு யி5 ஆயிரம் வீதம் 6 லட்சத்து 25 ஆயிரத்து 481 விவசாயிகளுக்கு ரூ313.89 கோடி நிவாரணத்தொகையாக அறிவிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் தேசிய, கூட்டுறவு வங்கிகள் மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகின்றன.நிவாரணத்தொகை வழங்குவதில் பல்வேறு முறைகேடுகளும், குளறுபடிகளும் ஏற்பட்டுள்ளன. சாகுபடி செய்யாத தரிசு நிலங்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சாகுபடி செய்த நிலங்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படவில்லை. நிலத்தின் உரிமையாள ரும், விவசாயம் செய்தவரும் வெவ்வேறு நபர்களாக இருப்பதால், நிவாரணத்தொகை யாருக்கு வழங்கு வது என்ற குழப்பம்

தொடர்ந்து நீடித்து வருகிறது. சில இடங்களில் அறிவித்த தொகையை விட மிக குறைவாக ஏக்கருக்கு ரூ3 ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. விஏஓ, கூட்டுறவு வங்கி அதிகாரிகள் சிலர் நிவாரணத் தொகையில் ரூ500 முதல் ரூ1,000 வரை பிடித்தம் செய்கின்றனர். மேலும் வறட்சி நிவாரணத் தொகையில் பயிர் கடன் வசூலிக்க கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் சில கூட்டுறவு வங்கிகளில் வறட்சி நிவாரணத்தொகை கொடுக்கும்போதே, பயிர் கடன்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், 'வறட்சி நிவாரணத் தொகையில் பயிர் கடன் வசூலிக்க கூடாது என அரசு உத்தரவு உள்ளது. ஆனால் கூட்டுறவு வங்கி அதிகாரிகள் அரசு உத்தரவை மீறி பயிர் கடன்களை வசூலிக்கின்றனர். தவிர ஏக்கருக்கு யி500 வரை விஏஓ, கூட்டுறவு வங்கி அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் விவசாயத்திற்காக வெளி இடங்களில் வாங்கிய கடன்களை செலுத்த முடியவில்லை. வறட்சி நிவாரணம் கொடுத்தும் பயனில்லை' என்றனர்.

## மசாலா பொருட்கள் ஏற்றுமதி ரூ10,000 கோடியை தாண்டியது



கொச்சி: சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் தொடர்ந்து தேக்க நிலை நிலவி வந்தாலும், இந்தியாவின் மசாலா பொருட்கள் ஏற்றுமதி ரூ10 ஆயிரம் கோடியை தாண்டியுள்ளது. நடப்பாண்டில்(2013) ரூ11,171 கோடி மதிப்பிலான 6,99,170 டன் மசாலா பொருட்கள் ஏற்றுமதியாகியுள்ளன. 2012ம் ஆண்டில் ரூ9,783 மதிப்பிலான 5,75,270 டன் மசாலா பொருட்களே ஏற்றுமதி செய்யப்பட்டன. முதல்முறையாக எடையில் 22 சதவீத வளர்ச்சியும், மதிப்பில் 14 சதவீத வளர்ச்சியும் எட்டப்பட்டுள்ளது. சீரகம், புதினா, மிளகாய் ஆகியவற்றின் ஏற்றுமதி 2012,13ம் ஆண்டில் அதிக வளர்ச்சி பெற்றது. புதினா பொருட்கள், ஏலக்காய் (பெரியது), கொத்துமல்லி, கடுகு, பூண்டு, பெருங்காயம், மஞ்சள், கரி மசாலா தூள் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது என்று மசாலா வாரிய தலைவர் ஏ.ஜெயாதிலக் கூறினார்.

## ஈரோடு விற்பனை கூடத்தில் மஞ்சள் விலை ஒரே வாரத்தில் குவின்டாலுக்கு ரூ300 சரிவு



ஈரோடு: ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த வாரத்தை விட மஞ்சள் விலை, குவின்டாலுக்கு ரூ300 சரிந்தது. ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெறும் ஏலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மஞ்சள் வியாபாரிகள் பங்கேற்கின்றனர். நேற்றைய ஏலத்தில் ஒரு குவின்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ6699க்கும், கிழங்கு மஞ்சள் ரூ5480க்கும் விலை போனது. கடந்த வாரம் 5ம் தேதி அதிகபட்சமாக விரலி மஞ்சள் ரூ7044க்கும், 6ம் தேதி ரூ7072க்கும் விலை போனது. இந்நிலையில் நேற்று கடந்த வாரத்தை காட்டிலும் குவின்டாலுக்கு ரூ300 வரையிலும் விலை குறைந்து காணப்பட்டது. செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் மார்க்கெட்டை பொறுத்தவரை நேற்று விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ6475க்கும், கிழங்கு மஞ்சள் ரூ5477க்கும் விலை போனது. கடந்த வாரம் வெளிமார்க்கெட்டில் விரலி மஞ்சள் ரூ6400க்கும், கிழங்கு மஞ்சள் ரூ5400க்கும் விலை போன நிலையில் நேற்றைய விலையு டன் ஒப்பிடும் போது மஞ்சள் விலையில் பெரிய மாற்றம் இல்லை. மஞ்சள் வியாபாரிகள் கூறுகையில், 'தமிழகத்தில் மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைப்பதால், ஆந்திராவிலிருந்து தமிழக மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் மஞ்சள் விலை தொ டர்ந்து சரிவடைந்து வருகிறது. புதுமஞ்சள் வரத்து குறைந்தால் விலை சரிவது கட்டுப்படும்' என்றனர்.

## கடும் வறட்சியால் கரும்பு சாகுபடி குறைந்ததால் வெல்லம் உற்பத்தி பாதிப்பு



உடுமலை: கடும் வறட்சி காரணமாக கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்ததால், அச்சு வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம் உடுமலை, காரத்தொழுவு, சாமராயபட்டி, கொழுமம், கோவை மாவட்டம் ஆனைமலை, ஓடையகுளம், அம்பராம்பாளையம் உள்ளிட்ட பல கிராமங்களில் அச்சு வெல்லம் தயாரிக்கப்படுகிறது. குறிப்பாக, உடுமலை, மடத்துக்குளம் பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் அமராவதி கூட்டுறவு ஆலை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கரும்பு சப்ளை செய்கின்றனர். இதுதவிர, அச்சு வெல்லம் தயாரிப்புக்காக சுமார் 250 ஏக்கரில் சில விவசாயிகள் கரும்பு பயிரிட்டு வருகின்றனர். விவசாயத்துக்கு அமராவதி ஆற்று நீர் மற்றும் ஆழ்குழாய் தண்ணீரை நம்பியுள்ளனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து அமராவதி அணை நீர்மட்டம் குறைந்ததால் பாசனத்துக்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் கரும்பு சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது. அமராவதி சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்யும் கரும்பு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாதியாக குறைந்தது. இதேபோல் வெல்லம் உற்பத்திக்கும் போதிய அளவில் கரும்பு கிடைக்காததால், வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. உடுமலை பகுதியில் மட்டும் 8 வெல்ல உற்பத்தியாளர்கள் உள்ளனர். ரோஸ், கருப்பு, வெள்ளை என பல ரகத்தில் தயாரிக்கப்படும் அச்சு வெல்லத்தை, மொத்த வியாபாரிகள் வாங்கி சென்று பழநி, பொள்ளாச்சி மற்றும் கேரள மார்க்கெட்டில் விற்கின்றனர். வெல்ல உற்பத்தியாளர்கள் கூறுகையில், 'கரும்பு கிடைக்காததால் தேவையான அளவு வெல்லம் உற்பத்தி செய்ய முடியவில்லை. 30 கிலோ கொண்ட ஒரு மூட்டை முதல் தரம் தற்போது ரூ1600க்கும், 2ம் தரம் ரூ1350க்கும், 3ம் தரம் ரூ1100க்கும் விற்கிறது. உற்பத்தி குறைந்துள்ளதால், தேவை அதிகரித்து விலையும் சற்று உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டைவிட ஒரு மூட்டைக்கு சராசரியாக ரூ500 வரை கூடுதலாக கிடைத்துள்ளது. இருப்பினும், தேவையான அளவு உற்பத்தி செய்ய முடியாததால், பாதிப்பு ஏற்பட்டுள்ளது, என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.06.2013 A.M**

---

## திருச்சியில் சூறை காற்றினால் வாழைகள் சேதம்: ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் சாய்ந்த வாழையை விவசாயிகள் எடுத்து வந்து கலெக்டரிடம் கோரிக்கை மனு

திருச்சி

திருச்சியில் சூறை காற்றினால் வாழைகள் சாய்ந்ததால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் விவசாயிகள் கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

மக்கள் குறைதீர்க்கும் கூட்டம்

திருச்சி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் தலைமை தாங்கி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கை எடுத்தார்.

கூட்டத்தில் மனு கொடுப்பதற்காக தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விசுவநாதன் தலைமையில் ஏராளமான விவசாயிகள், காற்றில் சாய்ந்த வாழையை தூக்கிக்கொண்டு கலெக்டர் அலுவலகம் வந்தனர்.

ரூ.1 லட்சம் நிவாரணம்

அவர்கள் கொடுத்த மனுவில், ''திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அடித்த சூறை காற்றினால் சுமார் 50 கிராமங்களில் 24 ஆயிரம் ஏக்கரில் நடப்பட்டிருந்த 20 லட்சம் வாழைகள்

சாய்ந்து சரிந்தன. இதனால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் கூறியிருந்தனர்.

மருங்காபுரி பகுதி அ.தி.மு.க. ஊராட்சி செயலாளர் கோபால், பொதுமக்கள் சார்பில் அளித்த மனுவில், ''புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மருங்காபுரி தாலுகா அலுவலகத்தை மருங்காபுரியிலே கட்ட வேண்டும். இதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்தி தர பொதுமக்கள் தயாராக உள்ளனர். எனவே மருங்காபுரி தாலுகா அலுவலகத்திற்கு தேவையான கட்டிடங்களை மருங்காபுரி தவிர வேறு எங்கும் அமைக்க கூடாது'' என குறிப்பிட்டு இருந்தனர்.

<u>டாஸ்மாக் கடை</u>

லால்குடி அருகே செம்பரை கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கொடுத்த மனுவில், ''தங்கள் பகுதியில் உள்ள மின் மாற்றி பழுதடைந்து விட்டதாகவும். இதனால் விவசாயத்திற்கு தேவையான மின்சாரம் கிடைக்கப்பெறாமல் 20 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் பாதிப்படைந்துள்ளது. எனவே செம்பரையில் பழுதடைந்த மின்மாற்றியை சீரமைத்தோ அல்லது புதியதாக மின் மாற்றி அமைத்தோ தர வேண்டும்'' என கோரியிருந்தனர்.

இதேபோல விடுதலை சிறுத்தைகள் கட்சி காஜாமலை பகுதி செயலாளர் செந்தில்முருகன், இளைஞர் காங்கிரஸ் தலைவர் வசந்தகுமார் ஆகியோர் தலைமையில் எடமலைப்பட்டிபுதூர் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கலெக்டர் அலுவலகம் வந்து அளித்த மனுவில், தங்கள் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

<u>ரேசன் கார்டுகளை ஒப்படைக்க முயற்சி</u>

திருச்சி அருகே உத்தமர்சீலி பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானவர்கள் தங்களது ரேசன் கார்டுகள், வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை கலெக்டரிடம் ஒப்படைக்க போவதாக கூறி வக்கீல் பொன்முருகேசன் தலைமையில் கலெக்டர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக திரண்டு வந்தனர். அவர்களை பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் நுழைவு வாயில் பகுதியில் தடுத்து நிறுத்தி 5 பேர் மட்டும் உள்ளே சென்று மனு கொடுக்க அனுமதித்தனர். இதையடுத்து அனுமதிக்கப்பட்ட நபர்கள் மட்டும் கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

அப்போது தங்களது ரேசன்கார்டுகள், வாக்காளர் அடையாள அட்டையும் கொடுக்க முயன்றனர். இதனை கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வாங்க மறுத்து கோரிக்கை குறித்து கேட்டார். அப்போது அவர்கள் கூறுகையில், ''தங்கள் பகுதியில் வசித்து வரும் ஒரு பிரிவினர் எங்களை

தரக்குறைவாகவும், தகாதமுறையிலும் பேசி வருகின்றனர். இது குறித்து நெம்பர் 1 டோல்கேட் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. எனவே தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எங்களது ரேசன்கார்டு, வாக்காளர் அடையாள அட்டைகளை திரும்ப ஒப்படைத்து விட்டு வேறு இடத்திற்கு செல்கிறோம்'' என்றனர்.

நடவடிக்கை

இதையடுத்து கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் இது குறித்து உதவி கலெக்டர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். இதேபோல பொதுமக்கள் அளித்த மனுக்களையும் பெற்றுக்கொண்ட அவர் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி உடனடியாக தீர்வு காண அறிவுறுத்தினார்.

## வடகாடு பகுதியில் சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு இழப்பீடு வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

வடகாடு

வடகாடு பகுதியில் வீசிய சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட பகுதி களை பார்வையிட்டு உரிய இழப்பீடு வழங்க மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவ சாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பயிர்கள், மரங்கள் நாசம்**

கோடை மழை இல்லாமல் வறண்டு கிடந்த வடகாடு பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இரவில் பலத்த காற்றுடன் லேசான மழை பெய்தது. இதில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை, சோளம் உள்ளிட்ட பயிர்களும், பலா உள்ளிட்ட மரங்களும் சாய்ந்தன.

மரங்கள் மற்றும் கிளைகள் சாய்ந்து சாலை, மின்கம்பி, தொலைத்தொடர்பு வழித் தடத்தில் விழுந்ததால் அதற் கான சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இத்தகைய பாதிப்பால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப் படுகிறது. இதனால் நூற்றுக் கணக்கான விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.

**நடவடிக்கை இல்லை**

இது குறித்து விவசாயி கருப்பையா கூறுகையில், கடும் வறட்சி, மின் தட்டுப்பாடு இவற்றிற்கிடையில் கால் நடைகளை விற்று, வட்டிக்கு கடன் பெற்று விவசாயம் செய் தோம். பலத்த காற்றால் சில நிமிடங்களில் இவையனைத் தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதோடு, மின்சாரம், தொலைத்தொடர்பு உள் ளிட்ட சேவைகளும் பாதிக்கப் பட்டுள்ளன. குடிநீருக்கு கூட தவிக்கும் இந்தப் பகுதிகளில் சீரமைப்பு பணிகள் மேற் கொள்ள அதிகாரிகளால் முறையான நடவடிக்கை இல்லை.

**இழப்பீடு**

சூறைக்காற்றால் பாதித்த பகுதிகளை பார்வையிடாத தால் இழப்பீடு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் சிறப்பு கவனம் செலுத்தி பாதிக்கப் பட்ட பகுதிகளை ஆய்வு மேற் கொண்டு, இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டும், என்றார்.

இதுவே பாதிக்கப்பட்டுள்ள ஒட்டு மொத்த விவசாயிகளின் கோரிக்கையாகும்.